**செய்தி வெளியீடு** **நாள் : 14.03.2026**

**அம்பத்தூர் சட்டமன்றத் தொகுயில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், நெடுஞ்சாலைத் துறை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் கட்டப்படவுள்ள பல்வேறு புதிய திட்டப் பணிகளை மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தொடங்கி வைத்தார்**

*********

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி இன்று (14.03.2026) மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வெங்கடாபுரத்தில் உள்ள முழு நேர கிளை நூலகத்தை வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் ரூ.6.16 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள "**புதிய முதல்வர் படைப்பகம் மற்றும் நவீன நூலகம்**", நெடுஞ்சாலைத் துறை சார்பில் ரூ.34 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள **அம்பத்தூர் இரயில்வே மேம்பாலப் பணி** மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.1.83 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மண்டலம்-7, வார்டு-88க்குட்பட்ட பகுதிகளில் **புதிய ஆரம்ப சுகாதார மையம்**, **புதிய பேருந்து நிறுத்தம்**, **மில்லேனியம் பூங்காவில் டென்னிஸ் மைதானம் அமைத்தல்**, பல்வேறு தெருக்களில் **புதிய பெயர் பலகைகள்** அமைத்தல் ஆகிய பணிகளுக்கான பூமி பூஜையில் கலந்து கொண்டு பணிகளை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில், மாண்புமிகு மேயர் திருமதி.ஆர்.பிரியா, அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜோசப் சாமுவேல், சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., முதன்மை செயல் அலுவலர் திரு.சந்திர சேகர் சாகமூரி, இ.ஆ.ப., மாநகராட்சி மண்டலக் குழுத்தலைவர் திரு.பி.கே.மூர்த்தி, நிலைக்குழு தலைவர் (பொது மருத்துவம்) டாக்டர் சாந்தகுமாரி, நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர் (பெருநகரம்) திரு.ஜவகர் முத்துராஜ், கண்காணிப்பு பொறியாளர் திரு.ராஜதுறை, சிஎம்டிஏ கண்காணிப்பு பொறியாளர் திரு.பாலமுருகன், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி.நாகவள்ளி பிரபாகரன், திரு.டி.எஸ்.பி.ராஜகோபால், திருமதி.உமா சந்தானம், டாக்டர் பூர்ணிமா, திருமதி பொற்கொடி, அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

Verified RealEstate ™